ரூ. 5.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

திருவள்ளுவராண்டு 2039
தை - ஜனவரி 2008



தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு 16-1-2008ல் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்புச் செய்தல்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	5-00
ஆண்டுச் சந்தா	ரூ.	60-00
ஆயுட் சந்தா	ரூ.	600-00
புரவலர் கட்டணம்	ரூ.	1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவராண்டு 2039 (சர்வசித்து)		மாதம் :	தை
மலர் : 22		இதழ் :	1

திருக்குறள் வழியில் தொடரும் பயணம்!

திருக்குறளுக்கு ஓர் சொல்லோவியம்
திருவள்ளுவருக்கு ஓர் கல்லோவியம்
வாழும் வள்ளுவத்திற்கு ஓர் கோட்டம் கண்டு
நாளும் நாளும் திருக்குறள் சிந்தனையை, செயலில் தாங்கி வாழும் வள்ளுவராய் உலா வரும் முத்தமிழறிஞர் திருக்குறள் முதல்வர் டாக்டர். **கலைஞர்** அவர்கள் 2008 ஆம் ஆண்டிற்கான அய்யன் திருவள்ளுவர் விருதை நமக்கு வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளார்கள்.

"திருக்குறளே நமது பொதுமறை. திருமுறைகளே நமது மறைகள்"

என்ற கொள்கை முழக்கம் தாங்கித் தான் நமது மகாசந்நிதானத்தின் திருமுகத்தாளும். அதன் வழியே நமது திருமுகத்தாளும் (கடிதத்தாள்) அமைந்திருக்கும்! ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்கு மேலாக மகாசந்நிதானம் உருவாக்கிச் செயல்படுத்திய தமிழகத் திருக்குறள் பேரவை அமைப்பு இன்று பரந்து விரிந்து உலகத்திருக்குறள் பேரவை அமைப்பாக உயர்ந்து, வளர்ந்து உலக நாடுகளில் கிளைகளை அமைத்து திருக்குறள் பணியாற்றி வருகின்றது. தமிழகத்தில் உலகத் திருக்குறள் பேரவையின் பணிகள் வலிமையோடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இளைய தலைமுறையை நோக்கி, இன்னமும் வலிமையாக, திருக்குறள் சிந்தனைகளைக் கொண்டு சேர்க்க வேண்டிய காலச்சூழலில் இருக்கின்றோம். திருவள்ளுவர் திருநாளன்று வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு நிதிஅமைச்சர்

பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் பரிதிஇளம்வழுதி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் "அய்யன் திருவள்ளுவர் விருது" வழங்கி மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் கனிந்தும் கடந்தகால நினைவுகளோடு, இந்நாள் வரை உள்ள அன்பான நட்பைப்பற்றி ஆழமான உறவின் உணர்வோடு உரையாற்றினார்கள். மகாசந்நிதானத்தோடு தொடக்க காலத்தில் இருந்த எதிர் எதிர் நிலைப்பாடு. சந்தித்துக் கலந்து பேசியபின் ஏற்பட்ட கருத்து ஒற்றுமை அதன்பின் சட்டமேலவை உறுப்பினராக மகாசந்நிதானம் நியமனம். இன்றுவரை திருமடத்தோடு உள்ள ஆழமான நட்பு முதலியன பற்றி விரிவாக, மனம் நெகிழ்ந்து பேசினார்கள்!

நாம் பொது மக்களுக்கும் அரசுக்கும் உறவுப்பாலமாக இருந்து, பொதுப்பிரச்சனைகள் குறித்து முதல்வர் கவனத்திற்குக் கொண்டு சேர்ப்பதைப் பற்றியும், அவை தொடர்பாக நாம் தரும் தொல்லைகள் பற்றியும், அன்போடு குறிப்பிட்டார்கள் ! அன்புக்குரிய முதல்வர் அவர்களுக்கு ஜல்லிக்கட்டு பிரச்சனை குறித்து நாம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவாறு யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாரதி குறிப்பிட்ட அருமைத் தமிழ் மொழியை செம்மொழிச் சிம்மாசனத்தில் அமரவைத்த முழுப் பெருமையும் முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்,

"தமிழர் பண்பாட்டின் எஞ்சிய கூறுகளில் ஒன்றாகிய ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு என்று அழைக்கப்படும் ஏறுதழுவுதல், தடைசெய்யப்பட்ட நிலையில் உச்சநீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் தவித்துக் கொண்டிருக்கிறது. தமிழருக்கும், தமிழர் நலனுக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் எதிரான அறப்போரிலும், மறப்போரிலும் எப்பொழுதும் ஈடுபட்டு விருதுகளையும், விழுப்புண்களையும் ஒருசேரச் சுமக்கின்ற தாங்கள் உச்சநீதிமன்றத்தின் தடையை நீக்கி, தைத்திங்கள் தமிழர் திங்களாய் மலர ஆவன செய்ய அன்புடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்" என்று வேண்டுகோள் விடுத்திருந்தோம்! ஓய்வு அறியாது, உறக்கம் இல்லாது தமிழ்

மக்களின் நலமே தம் பணி என்று பணியாற்றும் முதல்வர் அவர்கள், உச்சநீதிமன்றத்தில் குறைவான நேர அவகாசம் இருக்கும் நிலையில் தம் சட்டத்துறையின் நிர்வாக இயந்திரத்தை முடுக்கி, விரைந்து வேகமாய் செயல்பட்டுத் தடைநீக்க ஆணை பெற்றுத்தந்தார்கள். இதற்காக நாம் தொல்லை தந்ததாய் அன்போடும் நகைச்சுவையோடும் குறிப்பிட்டார்கள்! ஏற்புரை நிகழ்த்தும் போது நாம் குறிப்பிட்டவை. "சேக்கிழார் தொண்டர்களின் இயல்பை குறிப்பிடும் பொழுது

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்று வீடுபேறு கூட வேண்டாம் என்று தொண்டைத் தொண்டிற்காகவே ஆற்றுவது உண்மையான தொண்டுநெறி. தொண்டும் துறவும் இணைந்த வாழ்க்கையில் விருதுகள் கூடச் சுமைகள்தான்! திருக்குறளுக்கு உரை தீட்டிய உரையாசிரியராய், குறளோவியம் தீட்டிய ஓவியராய், வள்ளுவர் கோட்டம் வடித்திட்ட பொறிஞராய், கன்னியாகுமரிக் கடற்கரையில் உலகின் எட்டாவது அதிசயமாகிய அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை எழுப்பிய சிற்பியாய், திருக்குறள் நெறியில் ஆட்சிச் சக்கரத்தை சுழற்றுவதன் மூலம் சாமான்ய மக்களின் முகங்களில் மலர்ச்சியாய் விளங்குகின்ற திருக்குறள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கியதால் சுமையையும், சுகமாய் ஏற்றுக்கொண்டோம் என்று குறிப்பிட்டோம்.

திருக்குறளே நமது பொது மறை என்று முழங்கிக் காலமெல்லாம் திருக்குறள் நெறி காட்டிய தடத்தில் உலகத் திருக்குறள் பேரவை வழியே சமய, சமுதாய மேம்பாட்டுக்குப் பணியாற்றிய நமது மகாசந்நிதானத்தின் திருவடிகளுக்கு இவ்விருது சமர்ப்பணம்! உலகத் திருக்குறள் பேரவையின் ஒவ்வொரு திருக்குறள் தொண்டருக்கும், உலகமெல்லாம் திருக்குறள் பணியாற்றும் திருக்குறள் தொண்டர்களுக்கும் இவ்விருது சமர்ப்பணம்! நமது பயணத்தின் பாதை வெகுதூரம்! பயணமும் வெகுநேரம்! திருக்குறள் நெறி காட்டிய தடத்தில் நமது சமய சமுதாய மேம்பாட்டுப் பணிகள் என்றும் உங்களோடு தொடரும் !

என்றும் வேண்டும் இன்பு அன்பு

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

83. கூடா நட்பு

தீய நட்புக்கு அடுத்துக் கூடா நட்பு. தீய நட்பு வெளிப்படையாகத் தெரியக்கூடியது. கூடா நட்பு என்பது நட்பு போலக் காட்டிப் பகையும் பழியும் வளர்ப்பது. இத்தகு நட்பில் தொடர்பு கொண்டு ஏமாந்து கெட்டோர் வரலாறு ஏராளம். ஏசு பெருமானைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் கூடா நட்புத்தானே! அகமும், புறமும் ஒத்து வெற்றியிலும் தோல்வியிலும் இன்பத்திலும் துன்பத்திலும் நிற்கும் நட்பே நட்பு. இத்தகு உயரிய நட்பில் கடமையும் உரிமையும் பொருந்தும். கூடா நட்பு கோடி பெறினும் வேண்டாம்.

சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. (821)

இயல்பாக நட்புக்கொள்ள முன்வராதிருந்து தமக்கு வாய்ப்பென அமையும்போது நட்புக்கு வந்து கூடினார்போலப் பழகுவார் பட்டடையேயாம்.

நட்பு என்பது இயல்பாக அமைவது. நட்புக்குத் தற்சார்பான குறிக்கோள் இல்லை. இருத்தல் ஆகாது. நட்புச் செய்தலே நட்பின் குறிக்கோள் என்ற உயர்நெறி உணர்த்தப் பெறுகிறது.

இனம்போன்று இனம்அல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். (822)

தமக்கு உற்றார்போலக் காட்டி, உண்மையில் உற்றாராக இல்லாதார் உறவு, அடிக்கடி மாறும் மகளிர் மனம் போல மாறுபடும்.

வலிமையில்லாத மகளிர் பாதுகாப்புக் கருதிய ஐயத்தால் அடிக்கடி மாறி நினைக்கும் மனமுடையார் என்பது அறிவியல் உண்மை. குறை, மகளிருடையதன்று; சமூகத்தினுடையது.

தமக்குரியார் போன்று பழகுதலும் ஆனால் அதேபோன்று அத்தகைய உறவைப் பேணுதலும் இந்த உலகில் அதிகம் என்பதறிக.

பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. (823)

9/1

பல நூல்களைக் கற்றும் மனந்திருந்தி நட்பாகும் பழக்கம் பகைவருக்கு இல்லை. நூல்களைக் கற்றல் வாழ்க்கையில் திருத்தமும் நல்வாழ்க்கையும் காண என்றுணர்த்தியது அறிக.

ஒரோ வழி பகைவரானார் பின் மனம் திருந்தி நட்பாடல் தேற்றாதாராயின் பல கற்றும் என்ன பயன்?

முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சகரை அஞ்சப் படும். (824)

முகத்தில் இனிய புன்முறுவலையும் அகத்தில் பகையையும் வைத்திருக்கும் வஞ்சகர் அஞ்சத்தக்கவர்.

"அகத்தில் கறுத்துப் புறத்தே வெளுத்தவர்" என்ற திருவருட்பா அறிக.

மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று. (825)

மனத்தினால் தம்மொடு மேவிப் பொருந்தாதவரை எந்த ஒரு சொல்லினாலும் தெளிந்தறிதல் இயலாது.

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். (826)

நட்பு செய்தார்போல் நல்லவைகளையே சொல்லிலும் பகைவர் தம் சொல்லின் தன்மை உடன் உணரப்படும்.

சொற்களின் அமைப்பில்நட்புத் தோன்றும். ஆயினும் சொற்களின் வெளிப்பாட்டு முறை, ஒலி அமைவு ஆகியவற்றின் மூலம் சொற்கள் பகைமை வழியன என்பதை உணரலாம்.

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (827)

வில்லின் வணக்கம் கொல்லுதல் உண்மையாதலால், பகைவர்களிடம் சொல்லில் காட்டப்பெறும் வணக்கம் கொள்ளற்க.

தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. (828)

வணக்கம் செய்யும் பகைவர் கைகளுக்குள்ளும் கொல்லும் கருவி ஒளிந்து இருக்கும். பகைவர் நம்மிடம் அழும் கண்ணீரும் நடித்துக் கொல்லும் தன்மையுடையதே.

தொழுதலும் அழுதலும் நட்பின் அடையாளம் மட்டுமல்ல என்பது கருத்து. பகைவர் திறமையாகப் பகைமையை மறைத்துக்கொண்டு தொழுதலும் அழுதலும் செய்து வெல்வர். இது உலக வழக்கு. ஆதலால் விளையும் பயன்களைப் பொறுத்தே நட்பு, தேர்வு செய்யப்பெறுதல் வேண்டும்.

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லல் பாற்று. (829)

மனத்தினுள் பகைமை கொண்டு, புறத்தே நட்புத் தொடர்பான உதவிகள் உபசரணைகள் மிகச்செய்து, நட்பாடல் செய்வோரிடம் அதுபோலவே பழகவேண்டுமேயன்றி உண்மையான உறவாக்கிக் கொள்ளக் கூடாது.

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதே" என்பது அறநெறி; இது அரசு நெறி. அரசு நெறியில் விதிவிலக்கு உண்டு.

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகம்நட்பு ஒரீஇ விடல். (830)

பகைவர் நட்பாகும் காலம் வந்தால், அவரோடு முகநக நட்புச் செய்க. அகங்கலந்த நட்புக் கொள்ளற்க.

அகங்கலந்த நட்பு, நம்பிக்கையளிப்பது. அந்த நம்பிக்கை அழிவுக்குக் காரணமாகிவிடக்கூடாது என்பதனால் "முகம் நட்டு அகம்நட்பு ஒரீஇ" என்று கூறினார்.

(தொடரும்)

தமிழக அரசுக்கும்
மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றி!

நமது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல **அடிகளார்** அவர்களுக்கு, தமிழக அரசின் 2007-ஆம் ஆண்டுக்குரிய **"திருவள்ளுவர் விருது"** வழங்கியுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் நெஞ்சு நிறைந்த நன்றியினை "மக்கள் சிந்தனை" அன்புடனும் மகிழ்வுடனும் தெரிவித்துக் கொள்கிறது.

- ஆசிரியர்

(நவம்பர் இதழ்த் தொடர்ச்சி)

திருமுறைகளின் "மந்திரத் தன்மை"

20, 21-08-2007 தஞ்சைத் தமிழ்ப் பல்கலையில் நிகழ்ந்த திருமுறைக் கருத்தரங்கில் வாசித்த கட்டுரை

(முனைவர். சு. சந்திரா, மதுரை)

உய்யவந்ததேவநாயனார் தமது திருக்களிற்றுப்படியாரில் குறிப்பிடுகிறார்.

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்த - லேடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

என்பது திருக்களிற்றுப்படியார் பாடலாகும். ஓடம் பெற்றமை, முத்துச் சிவிகை பெற்றமை, உலவாக்கிழி பெற்றமை, மறைக்கதவு அடைத்தல், ஆண்பனை பெண்பனை ஆனமை, பொற்றாளம் பெற்றமை, பாலை நெய்தலாகப் பாடியமை, ஏடு ஆற்று நீரோட்டத்தில் எதிர்த்தமை, எலும்பு பூம்பாவையாய் உருவெடுத்தமை ஆகிய அனைத்தும் தென்புகலி வேந்தன் எனப்படுகின்ற சம்பந்தர் பாடலின் செயலாகும் என்பது இதன் பொருள் ஆகும். இதே பொருளமைய ஆனால் வேறு சில அற்புதச் செயல்கள் அமைய, மற்றொரு தனிப்பாடல் சம்பந்தர் செந்தமிழின் மந்திரத்தன்மையை எடுத்தோதுகிறது.

"புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென்(று) இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே;
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே;
பழைய என்புபொற் பாவைய தாக்குமே;
சினவராவிடம் தீரெனத் தீருமே;
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே;"

(தனிப்பாடல் -1)

(......................... சைவசமயாசாரியர் நால்வர் கட்டியங்கள் (தொகுப்பு.ப.10)

உய்யவந்ததேவநாயனார் கூறாது விடுத்த புத்தரிடம் வாது செய்தமை, அனல் வாதம், திருமருகலில் விடந்தீண்டிய வணிகனை உயிர்ப்பித்தல் என வேறு சில அற்புதங்களும் கூறப்படுகின்றன. இவற்றையெல்லாம்

ஆக்கிய செயல் சம்பந்தரது செந்தமிழ்ப் பாடலோடு தொடர்புபடுத்தப்படுவது அறிந்து எண்ணற்குரியது.

திருநாவுக்கரசர் பாடல் மந்திரங்களாதல் :

நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகக் கொள்ளப்படும். திருநாவுக்கரசது பாடல்களும் நிறைமொழி மாந்தர் ஆணையாய் மந்திரங்களாகியுள்ளன. இதனை உய்யவந்ததேவநாயனார்

கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்த - னல்ல
மருவார் மறைக்காட்டின் வாசறிறப் பித்த
றிருவாமூ ராளி செயல்.

எனத் திருக்களிற்றுப்படியாரில் சுட்டுகின்றார். யானை இடறுதல், நீற்றறையில் இடுதல், நஞ்சூட்டல், கடலில் பாய்ச்சுதல் முதலிய துன்பங்களினின்று இறைவனைப் போற்றிப்பாடிய பாடல்களே காத்தன; மறைக்காட்டில் வாசலைத் திறப்பித்தன. இவற்றோடு கூட, "கோள ராவின் கொடுவிடம் தீருமே" (மேலது) என அப்பூதியடிகளாரின் திருமகனாரைக் காத்த செயலும் "அப்பர் செய்யும் அருந்தமிழ்ப் பாடல் விளைத்தது" ஆகும்.

சுந்தரர் பாடல் மந்திரங்களாதல் :

சுந்தரர் செந்தமிழ் இறைவனையே இறங்கி நடக்க வைத்த பெற்றியுடையது ஆகும். இதனை,

வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே;
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே;
மங்கைபாகனைத் தூது நடத்துமே
மருவியாறு வழிவிட நிற்குமே;
செங்கலானது தங்கம தாக்குமே;
திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே;
துங்வான்பரி சேரற்கு நல்குமே;
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே;

எனச் சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களைத் தனிப்பாடல் பட்டியலிடுகிறது. அவிநாசியில் முதலையுண்ட பாலகனை வரவழைத்தது; வெள்ளையானையின் மீது சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றது; எம்பெருமான் சுந்தரருக்கும் துணைவியாருக்கும் இடையே தூது நடந்தது; ஆறு வழிவிட்டது; செங்கல் தங்கமானது; ஆற்றிலிட்டுப் பொன்னை குளத்தில் எடுத்தது; சேரமானை அவரது குதிரையோடு

விண்ணகம் செலுத்தியது என அனைத்தும் சுந்தரர் பாடலால் நிகழ்ந்தது என்பது இப்பாடல் பொருளாகும். தனிப்பாடல் கூறுவதினின்றும் திருக்களிற்றுப்படியார் "பாலை நெய்தல் பாடியது" எனக் குறிப்பிடும்.

மாணிக்கவாசகர் பாடல் மந்திரமாதல் :

உள்ளம் உருக்கும் திருவாசகத்தினை மந்திரமாகக் கூறுவர். சிவப்பிரகாசர் தமது நால்வர் நான்மணிமாலையுள் திருவாசகத்தின் சிறப்பினை எடுத்தோதும் விதமாக,

"மதுரைமா நகரில் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்"
....
(நால்வர் நான்மணிமாலை.12)

எனக் கூறுவார். இதனைத் தனிப்பாடல்,

பெருகும் வைகை தனையழைப் பிக்குமே;
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே;
நரியெ லாம்பரி யாக நடத்துமே;
நாடி மூகை தனைப்பேசு விக்குமே;
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்கும்மே;
பரமன் ஏடெழு தக்கோவை பாடுமே;
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே;
வாதவூரர் வழங்கிய பாடலே.

எனச் சுட்டுகிறது.

நரியைப் பரியாக்கியது; வைகையை அழைத்தது; பிரான்மேனியில் அடிபட்டது; பிட்டுக்கு மண்சுமந்தது; மணிவாசகர் கூறக்கூறப் பெருமானே கோவை எழுதினார் என அனைத்தும் மணிவாசகர் பாடலின் மந்திர ஆற்றலின் விளைந்தவை ஆகும்.

சம்பந்தர் பாடல் தந்த பிள்ளை :

மேற்கூறியவாறு நால்வர் பாடலும் மந்திரத் தன்மையுடையவை என்பதற்குப் பெரியபுராணமும் அதனை அடியொற்றிய நால்வர் நான்மணிமாலை, திருக்களிற்றுப்படியார், தனிப்பாடல் முதலியனவும் சான்றாக நிற்கின்றன. ஆனால், சம்பந்தர் பாடல் தந்த பிள்ளை சைவ சமய தத்துவத்தின் மூலமாகிய சிவஞானபோதத்தை அருளிய மெய்கண்டார் ஆவார்.

விதிப்பயனால் பிள்ளைப்பேறு இல்லையெனினும், சம்பந்தர் திருப்பாடல் வழி பிள்ளைப்பேறு நல்கினான் இறைவன். அருள்பழுத்த அக்குழந்தையே மெய்கண்டார்; ஈராண்டிலேயே ஞானம் வரப்பெற்று, தமது குலகுருவாகிய சகலாகம பண்டிதரைத் தமது சீடராக்கும் உயர் தகைமை பெற்றார். இவ்வருள் வரலாறு, திருமுறைகளின் மந்திரத்தன்மையைத் தெற்றெனப் புலப்படுத்துகிறது.

சொந்த அனுபவம் ஒன்று :

கட்டுரையாளரது வாழ்வில், திருமுறைகளால் ஏற்பட்ட பல நிகழ்வில் ஒன்று மட்டும் இங்கு சுட்டப்படுகிறது.

எனது தந்தையார் "டைபாய்டு" காய்ச்சல் வந்து இருந்த போது, அவரது ஆசிரியர் திரு. சங்கரநாராயணன் என்பார் (தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர்) பதினொரு நாட்கள் தொடர்ந்து மாலையில் வந்து நீறிட்டு "மந்திரமாவது" பதிகம் பாடி, வர, மருத்துவர் வியக்கும் வகையில் நலம் பெற்றார்.

இன்றளவும் எங்களது குடும்பங்களில் பல நிகழ்வுகளில் திருமுறையே வழிகாட்டியாக உள்ளது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

முடிவுகள் :

☆ மந்திரம் என்பது மறைமொழி; அது நிறைமொழி மாந்தர் ஆணையாகும்.
☆ திருமுறைவாணர்கள் நிறைமொழி மாந்தர் ஆவர். அவர் கூற்றாகிய திருமுறைகள் மந்திரங்கள் ஆகும்.
☆ சரியான சொற்கள் குறிப்பிட்ட அதிர்வுகளில் ஒருங்கிணையும் போது மந்திரத்தன்மை பெறுகின்றன. அவ்வதிர்வுகள் திருமுறைக்கும் உண்டு என்பர்.
☆ பசுகரணங்கள் பதிகரணங்களாகும் போது சொல்லும் சொற்கள் மந்திரங்களாகும். அவ்வழியேதான் திருமுறைகள் மந்திரங்களாகி மகிமைகள் புரிகின்றன.
☆ திருமுறைகள் மந்திரத்தன்மையுடையன என்பதற்கு நால்வர் பாடலினால் விளைந்த அற்புதங்கள் சான்றாகும். இச்சான்றுகளை திருக்களிற்றுப்படியார், தனிப்பாடல், நால்வர் நான்மணிமாலை ஆகியன அரண்செய்கின்றன.

☆ மெய்கண்டார் பிறப்பும் வரலாறும் திருமுறைகளின் மந்திரத்தன்மைக்கு மற்றுமொரு சான்றாகும்.

☆ கட்டுரையாளர் வாழ்வில் ஒரு நிகழ்வு மந்திரத்தன்மைக்குச் சான்றாகின்றது.

துணைநூல்

1. இரத்தினசபாபதி வை. திருமுறைப்பெருமை, 1991.
2. சத்தியவேல் முருகனார், திருமந்திரம், 1995.
3. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, 2002.
4. ஞானசம்பந்தன். அ.ச. மந்திரங்கள் என்றால் என்ன?, 2001
5. .... நால்வர் கட்டியங்கள், ...

வினாக்கள் :

வினா தொடுத்தவர் :

பேரா. **இராசேந்திரன்**, பூம்புகார் கலைக்கல்லூரி,

இன்றைய வாழ்வில் திருமுறைகைளின் மந்திரத்தன்மை சாத்தியமா?

ப்தில் : சாத்தியமே! ஜி.யு. போப்பின் வாழ்வில் திருவாசக மொழி பெயர்ப்பு அவரது ஆயுளைக் கூட்டியது.

முழுமையான நம்பிக்கை, இன்றளவும் திருமுறைகளின் மந்திரத் தன்மையை நடத்திக் காட்டுகிறது. பசுகரணங்களாக அன்றி பதிகரணங்களாகும் போது சாத்தியமே!

வினா தொடுத்தவர் :

பேரா. **பார்த்திபன்**, பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

வடமொழி, தென்தமிழ் இரண்டும் ஏத்தும் இறைவன் சிவன்தானே? ஏன் வடமொழியை வெறுத்து ஒதுக்க வேண்டும்.

பதில் : எம்மொழியையும் வெறுத்து ஒதுக்குதல் தமிழர் மரபன்று. வந்தாரை வாழவைக்கும் எம் தமிழகம் எம்மொழியையும் வெறுத்து ஒதுக்குதல் இல்லை. தமிழில் கிரேக்க மொழிச் சொல் உள்ளது. மராட்டியச் சொல் உள்ளது. போர்த்துக்கீசியர் சொல் உள்ளது. ஏன் தெலுங்கு, இந்தி, உருது, எனப் பல மொழிச் சொற்கள் உள்ளன. ஆயின் வடமொழி தமிழை மேலாண்மை செய்ய முற்படுவதால், வடமொழி மேலாண்மையைத் தடுக்க வேண்டிய கடப்பாடு கல்வியாளர்களாகிய நமக்கு உள்ளது. இன்று ஆங்கில மேலாண்மையைக் கட்டுப்படுத்துவதும் அவசியமாக உள்ளது.

(முற்றும்)

அருளாலய விழிப்பு

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

பன்னிரு மாதந் தன்னுள்
பதமான மார்க ழிக்கு
மின்னிடும் மதிப்புத் தானே
மிகுதியாய் உண்டு, பக்தி
மன்னிடும் என்ப தோடு
மதிப்பாக வீட்டு வாசல்
முன்னிடும் கோலந் தன்னால்
முறையான பெருமை தானே!

பதினொரு மாதக் காலப்
பல்வேறாய் எழுந்த மக்கள்
அதிகாலை எழுதல் என்ற
அருமைமிகு பழக்கந் தன்னை
விதியாக மார்க ழிக்கு
வித்தகமாய்க் கொள்ளல் போலப்
பொதுவாக மாதந் தோறும்
பொலிந்திட்டால் உயர்வென் பேனே!

இயற்கையின் விழிப்பெல் லாமும்
இதமான காலை யாகும்!
மயற்கையாம் மாலை தன்னில்
மண்டுமிரை தேடி விட்டுச்
செயற்கையாய்ச் செய்த கூட்டில்
சிலநேரம் தங்கி, நாளும்
அயற்கையில் பறக்க எண்ணும்
அதிகாலை பறவைக் கூட்டம்!

தொழுவத்தில் கட்டுண் டிட்ட
தொகைமிகு ஆக்க ளெல்லாம்
விழுதான வாரி சான
விருப்புறு கன்றுக் குத்தான்
பழுதிலாப் பாலை ஊட்டிப்
பரவச மாக்கும்! எந்த
அழுக்கையும் குளத்தில் போக்கும்
அலைமீனுக் கேது நேரம்?

மாலைக்கே இல்லா தான
மதித்திடும் சிறப்புத் தானும்
காலைக்கே வரக்கா ரணத்தைக்
கருத்துடன் நினைத்தால், அந்த
மாலைதான் மயக்கம் என்ற
மற்றுமொரு பொருள்தந் திடுமே!
காலையெனில் கால்ஜ என்ற
கனிவான சொற்பி ரிப்பில்;

தூயநற் பொருள்தான் உண்டு;
துளைமூக்கால் அமைதி யாக,
ஏயபுகழ் ஓசோன் என்ற
எழிலான பெயரில் பூமி
தோய்ந்திடும் காற்றைத் தானும்
தொடர்காலை சுவாசித் திட்டால்
மாய்ந்திடும் நோய்கள் மற்றும்
மண்டாது உடல்துன் பந்தான்!

இதனைத்தான் நம்முன் னோர்கள்
இறையுறை கோயில் தோறும்
உதயமிகு காலை நேர
உத்தம பூசை தன்னைப்
பதமான உசக்கா லத்தில்
பண்ணுபூசை உயர்வென் றேதான்
முதன்மையாய் எடுத்து சொன்னார்!
முறைமைமிகும் எந்நாட் கும்மே!

ஆதலால் மார்கழி மட்டும்
அதிகாலை எழுதல் போல
ஓதமிகு காலை தோறும்
ஒருங்குடன் எழுந்து விட்டால்
வாதபித்த சிலேட்டம் என்னும்
வம்பெலாம் உடலை அண்டா!
ஏதமின்றிச் செல்வ வாழ்வில்
எந்நாளும் வாழ லாமே!

இதற்குநான் சாட்சி ஒன்றை
இயம்பிடல் வேண்டும்! நம்மின்
இதயத்தில் இறையாய் உள்ள
இறைவனாம் அடிகள் தாமும்
அதிகாலைச் சூரிய னாக
அன்றாடம் எழுந்தி ருந்து
புதிதுபுதி தாகக் கற்றுப்
புதையலாய்ப் புகன்றா ரென்பேன்!

போகின்ற இடமெல் லாமப்
புலர்காலைப் பொழுதைப் பொன்னாய்
ஊகித்து வாழ்ந்த தாலே
உலகப்புகழ் பெற்றார்! நோயால்
ஏகியே வாழ்ந்த தில்லா
எழிலைப்போல் நாமும் வாழ்வில்
ஆகியே வாழ்ந்தால் அதனை
அருளாலய விழிப்பென் பேனே!



"மக்கள் சிந்தனை"
வாசக அன்பர்கள்
அனைவருக்கும்
இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

அடிகளாரின் கடவுட் கொள்கை

(கிருங்கை. சேதுபதி)

தமிழிலக்கிய உலகிலும் சமயவுலகிலும் தம் காலத்தில் தன்னிகரற்று விளங்கியவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். அறிவியல் உலகிற்கும், ஆன்மிக உலகிற்கும் இடையில் மனிதநேய அடிப்படையில் நல்லிணைப்பை உருவாக்கிச் செயற்படுத்திய பெருந்தகை. முரண்பாடுகளைப் பெரிது பண்ணிப் பகை வளர்க்கும் சூழலுக்கு மத்தியில் அவற்றுக்கிடையே அறியலாகும் ஒத்திசைவுகளைக் கண்டறிந்து நல்லிணக்கம் பேணியவர். தம் காலத்தில் பெரிதும் கேள்விக்குள்ளான சமயம் குறித்தும் கடவுள் வழிபாடு குறித்தும் தெளிவான விளக்கங்களையும் செயற்பாட்டையும் வகுத்தளித்து மக்களின் குழப்பங்களை நீக்கி அறவழியில் ஆற்றுப்படுத்தியவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ வான்மறை வகுத்தளித்த நெறிமுறைகளை இறைச்சீலங்களாக இயற்றியவர். கடவுளின் பெயரால் மாந்திரீக, தாந்திரீகப் பணிகளில் ஈடுபடாமல் மக்கள் பணியில் ஈடுபட்ட மடாதிபதி அவர். அவர் கண்டுணர்ந்து காட்டிய கடவுட் கொள்கை குறித்து ஆய்வதாக அமைவது இக்கட்டுரை.

அடிகளாரின் கடவுள் நம்பிக்கை

அடிகளார் கடவுள் நம்பிக்கை உடையவர். அவர்தம் கடவுள் கொள்கையானது சைவ சித்தாந்த வழிப்பட்டது. சைவ சித்தாந்தம் கடவுளை நம்புகிற சமயம். அச்சமயம் கடவுளுக்குச் சொல்லும் சிறப்பாவது, கடவுள் பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை என்பதாகும். மேலும், சித்தாந்தம் கடவுளின் அவதாரங்களோடு உடன்படுவதில்லை. உலகின் தலைவன் கடவுள். இயற்கைப் போக்கில், அவனே உயிர்களின் தலைவன். அவனே ஆண்டான். அவன் விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்படுபவன் அல்லன். காரணம் விருப்பு வெறுப்புகள் உலகியல் நிகழ்வுகள். உயிர்களின் நிகழ்வுகள். அவை அவனுக்குத் தெரியாதனவுமல்ல. சித்தாந்தச் செந்நெறியின் கடவுளாகிய சிவம் அறிவுருத்தன்மையது. சிவமாகிய அறிவுருவுக்குத் தொழிற்பாடு இல்லை. சிவம் தம்மையொத்த தமது எல்லைக்குள் அடங்கிய சக்தியின் மூலம் உலகைத் தொழிற்படுத்துகிறது. சிவம் அறிவுரு; சக்தி இயக்கம். இத்தத்துவத்தின் படிமுறை வளர்ச்சியில் தோன்றியதே அம்மையப்பன் வழிபாடு.

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பார் - அம்மையப்பர்
எல்லா உலகிற்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்" (திருக்களிற்றுப்படியார் - 1)

என்னும் பாடலை மேற்கோள் காட்டி உணர்த்துகின்றார் அடிகளார். மணிவாசகர் மரபில், தென்னாட்டுக்குரிய அக்கடவுளை எந்நாட்டுக்கு முரியதாகக் கண்டு காட்டுகிறார் (குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை தொகுதி - 11, ப.180)

கடவுள் நம்பிக்கைக்கான அடிப்படை

"மனித குலம் வரலாற்றுப் போக்கில் கண்ட தனிச்சிறப்புடைய கொள்கை, கடவுட்கொள்கையேயாம். கடவுட் கொள்கையின் தோற்றத்திற்குப் பல்வேறு அடிப்படைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று பயத்தின் அடிப்படையில் கடவுள் நம்பிக்கை தோன்றியது என்பது. இந்த அடிப்படை அவ்வளவு சிறப்புடையதன்று". (மேலது.தொகுதி-12, ப.240) என்பது அடிகளாரின் கருத்து. காரணம், "பயத்தை விட மிகப்பெரிய தீமை வேறொன்றில்லை. பயம் மனிதனின் ஆற்றலை அழிக்கும். பயத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள, கடவுளை நாடினால் விளையக் கூடிய பயன் பெரிதாக இல்லை. எதிர் விளைவுதான் மிகுதி. கடவுள் அறிவுப் பொருள். வாலறிவு. தனக்குவமையில்லாதது. வரம்பிலாற்றல் உடையது. அளவிலா இன்பமுடையது எனத் தேறி, சிற்றறிவு, சிறு தொழில், சிறு பொழுதின்பங்களில் சிக்கித் துன்புற்ற மனிதகுலம் தனது அறிவை, ஆற்றலை விரிவாக்கிக் கொள்ளக் கடவுளைத் தேடிக் கண்ட பிறிதோர் அடிப்படை. இஃது அறிவியல் சார்ந்த முறை" (மேலது. தொகுதி-12, பக்.240-241) என்கிறார் அடிகளார்.

அவர் மேலும் குறிப்பிடுவதாவது - "நமது கடவுள் நம்பிக்கை அவாவுதல் அடிப்படையில் தோன்றியது. நாம் பெற்றுள்ள அறிவும், ஆற்றலும் நமது வாழ்க்கையை வளமாக்கப் போதவில்லை. நம்முடைய அறிவு அகண்டமானால்தான் நாம் வளரமுடியும். வாழமுடியும். உய்தி பெற முடியும். ஆதலால் பேரறிவும் பேராற்றலுமுடைய கடவுளை - பேரறிவும் பேராற்றலுமுடைய பொருளை நாடினான். கடவுள், பேரறிவும் பேராற்றலுமுடையவன் என்று நம்பினான். எப்படி நம்பினான்" இந்த பரந்த உலகியற்கையில், இயற்கையின் நிகழ்வுகளில் ஏதோ ஓர் ஒழுங்கையும் (Order) முறைபிறழாத நிலையையும் (Consistency) கண்டான்.... இந்த வியத்தகு உலகின் ஒழுங்கை - முறைபிறழா

நிகழ்வுகளை - கடப்பாட்டுடன் இயங்கும் தன்மையைக் கண்டுணர்ந்து இவற்றிற்குக் காரணம் ஒன்றிருப்பதாக உணர்ந்து அந்த ஒன்றுக்குக் கடவுள் எனும் பெயர் சூட்டப்பெற்றது. அந்த ஒரு பொருளிடமிருந்து ஒழுங்கை, அறிவை, ஆற்றலைப் பெற்று வாழ்வை முறைப்படுத்திக் கொண்டு அவ்வழி முழுமையாக்கிக் கொள்ள, கடவுளை வழிபட்டான். கடவுள் வழி நின்றான் மனிதன்" (மேலது.தொகுதி - 12, பக்.230-331)

கடவுளின் இலக்கணம்

"ஓய்வின்றிச் சுழலும் இவ்வுலக இயக்கத்திற்கு இயைவாக நிற்கும் ஆற்றலே இறை. அது குறைவிலாதது. நிறைவுடையது, தற்சார்பில்லாதது. பொதுமைத் தன்மையது. பழமைத்தன்மையது. ஆனாலும் புதுமைப் பொலிவுடையது. அதுவே கடவுள். அது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது. எல்லை கடந்தது. தோற்றமும் அழிவும் இல்லாதது. இயல்பில் பேரறிவினது. பேராற்றலுடையது. அறத்தின் திருவுரு. அன்பின் ஆக்கம், அருளின் பொழிவு, தாயிற் சிறந்த தயாவுடையது. உயிர்களைத் தொடர்ந்து சுழன்று வருவது. உயிர்களை எடுத்தாள்வது. தூசு துடைப்பது. துன்பத்தைத் தொலைப்பது. வாழ்க்கையை வழங்குவது. இடையறாத இன்ப அன்பில் உயிர்கள் திளைக்கத் துணை செய்வது. இது சித்தாந்தச் செந்நெறி காட்டும் கடவுள் இலக்கணம்" (மேலது பக். 244-245)

கடவுள் என்னும் சொல்லின் பொருள்

ஆண்டவன், இறைவன், தெய்வம், பகவன் முதலான 105 பெயர்களால் (கழகத் தமிழகராதி, பக்.257-258) சுட்டப்பெறுகின்ற பரம்பொருளான "கடவுள்" என்னும் சொல்லுக்கான பொருள். "உலகத்தைக் கடந்தும், உள்ளிருந்தும் இயக்குதல் - நடத்துதல் என்பதாகும். கடத்தல் என்பது இடத்தைக் கடப்பது. காலத்தைக் கடப்பது. பொருளின் தன்மையைக் கடப்பது என்று பொருள் தரும். கடவுள் எந்தப் பொருளின் எல்லையிலும், எந்த நாட்டின் எல்லையிலும் அடங்கியதல்ல. காலத்தைக் கடத்தல் என்பதற்கு, காலம் தாழ்த்தல் என்பது பொருளன்று. கடவுள் தோன்றிய காலமும் மறையும் காலமும் இல்லை என்பது பொருள். பொருள்களின் தன்மையைக் கடத்தல் என்பதாவது, பொருள்களின் இயல்புகளில் அடங்காமல் அவற்றின் இயல்பு கடந்து நிற்றல். அதாவது வண்ணம், வடிவு, அளவு, சுவை ஆகிய எல்லை கடந்து நிற்றல் என்பதாகும். இங்ஙனம் கடந்து நின்றாலும் அவ்வப்பொருளில்

தன்நிலை கெடாமல் நின்றருளி இயக்குகின்றமையால் புறத்தேயும் உளன், அகத்தேயும் உளன். அதனால் சித்தாந்தம் எல்லாமாய் அல்லாமாய் விளங்குகின்றான் இறைவன் எனப் போற்றுகின்றது" (மேலது.பக்.178-179) என்பது கடவுள் என்னும் சொல்லுக்கு அடிகளார் அளிக்கும் விளக்கமாகும்.

கடவுள் உண்டா? இல்லையா?

"கடவுள் உண்டு என்பதும் இல்லையென்பதும் கவைக்குதவாத வெறும் பேச்சு" என்பான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். ஆனாலும் அவ்வளவு எளிதில் புறந்தள்ளி விட முடியாத அளவிற்குப் பெரிதானதொரு விவாதத்தையும் போராட்டங்களையும் கிளப்பிய இக்குழப்பம் குறித்து அடிகளார் அளிக்கும் விளக்கம் அறிவுநிலைப்பட்டது. அதனைப் பகுத்தறிவு என்பதனைவிடவும் மெய்யுணர்தல் என்பது சாலவும் பொருந்தும். காலம் கருதி அவர் வழங்கும் விளக்கமாவது - "கடவுள் உண்டா? இல்லையா? என்று விவாதம் நிகழ்த்த இது உரிய காலமன்று. அறியாமையே தோன்றாத அறிவு உலகத்தில் தோன்றிவிடுமானால், அதைப்பற்றி ஆராயலாம். கடவுள் இல்லை என்பவர்கள் மீது நமக்கு வருத்தம் இல்லை. அவர்கள் கடவுளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவும் நாம் தயாராக இல்லை. நம்முடைய கொள்கையே கடவுள் எல்லாமாக இருக்கிறார் என்பதுதான். கடவுள் உண்டு என்போர் கடவுளை வழிபடவேண்டும். கடவுள் தன்மையெனப் பாராட்டப்பெறும் அன்பு, அருள், ஒப்புரவுக் கொள்கை நாட்டில் தழைக்கும்படி கடவுள் நம்பிக்கையுடையோர் வாழ்ந்து காட்ட வேண்டும். சின்னங்களும் சடங்குகளும்தான் கடவுள் நெறி என்று மக்களை நம்ப வைக்கக்கூடாது." (மேலது.ப.49) கடவுள் உண்டு என்ற நம்பிக்கையினர் மேற்சுட்டிய "வழிபாட்டு அனுபவத்தில் ஈடுபட வேண்டும். அதேசமயம் கடவுள் இல்லையெனும் கொள்கையினர் அவர்கள் நம்புகின்ற அறிவில் வளர்ந்து புதிய அனுபவங்களைப் படைக்க வேண்டும். அதைவிட்டுவிட்டுக் கடவுள் இல்லை என்று சொல்வதினால் மட்டும் ஆகக் கூடியதொன்றுமில்லை. கடவுள் உண்மையை அறிந்து அனுபவிப்பதற்கு வளர்ந்த அறிவும் அனுபவமும் தேவை. மனிதகுலத்தின் அறிவோ இன்னமும் பிள்ளைமைப் பருவத்திலேயே இருக்கிறது. இந்த அறிவு இன்னும் பொருள்களை ஆராய்ந்தே முடிக்கவில்லை. இறைவன் பொருளுக்குப் பொருளாக இருப்பவன்" என விளக்கமளிக்கிறார் அடிகளார். (மேலது, ப.37).

(தொடரும்)

மூவகைச் சேய்மைச் சுட்டுகள்

(பேராசிரியர். **ஆ. சிவலிங்கனார்,** மயிலம்)

அ,இ,உ எனும் மூன்றெழுத்துகளும் சுட்டெழுத்துகள் ஆம். அகரச்சுட்டு அவன், அவள், அவர், அது, அவை எனச் சேய்மையில் உள்ளவற்றைச் சுட்டப் பயன்படும். இகரச்சுட்டு இவன், இவள், இவர், இது, இவை என அண்மையில் உள்ளவற்றைச் சுட்டப் பயன்படும். உகரச்சுட்டு உவன், உவள், உவர், உது, உவை என இடைமையில் உள்ளவற்றைச் சுட்டப் பயன்படும்.

உகரச்சுட்டு இன்று உலக வழக்கில் இல்லை. "உதுக்காண்", "உதுக்காண்", "உவக்காண்" எனச் செய்யுள் வழக்கில் மட்டும் காணப்படுகின்றது.

சேய்மைச்சுட்டாகிய அகரம் மட்டில் மூன்று வகையில் இருவகை வழக்கிலும் ஆளப்படுகின்றது.

இடவலமாகச் சேர்ந்து நிற்கும் மூவருள் ஒருவனைப் பார்த்து, "நீ நின் வலப்பக்கம் இருக்கும் அவனைச் சற்றுத் தள்ளி நிற்கச் சொல்" என்றால், அவன் என்பது சேய்மைச் சுட்டாகவும், "இவனையும் சற்றுத் தள்ளி நிற்கச் சொல்" என்றால் "இவன்" என்பது அண்மைச் சுட்டாகவும் கருதப்படும்.

எனவே சேய்மை அண்மை என்பன, பேசப்படும் சூழலுக்கேற்ப அமையும்.

இனிச் சேய்மைச் சுட்டு மூவகையில் வருமாறு காணலாம்.

1. சேய்மையில் உள்ளவனை "அவன்" எனச் சுட்டுவது ஒருவகை.
2. கடந்தகால நிகழ்ச்சியைச் சுட்டி ஒருவனை "அவன்" எனச் சுட்டுவதும் உண்டு.

ஒருவன் தன் அருகில் உள்ள நண்பனிடம், தூரத்தில் வரும் ஒருவனைச் சுட்டி, "அதோ வருகிறானே அவன் யார் எனத் தெரிகிறதா?" என்று கேட்டால், "அவன்" என்பது சேய்மைச் சுட்டாகும். நண்பன் தெரியவில்லை என்பானேயானால், "அன்று நாம் இருவரும் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது நம்மிடம் வம்பு பேசினானே அவன்தான்" என்றான். உடனே நண்பன், "ஓ! அவனா இவன்?" எனக் கூறினான். நண்பன் அவனா என்றும், இவன் என்றும் கூறியது ஒருவனையே. என்றாலும், அவன் என்பது வம்பு பேசியதைக் குறிக்கும். அது ஒரு காலத்தில் நிகழ்ந்தது. அதைச் சுட்டி நிற்றலின் அது "பண்டு அறி சுட்டு" எனப்படும். பண்டறி சுட்டு என்றால் ஒரு காலத்தில் (பண்டு) நிகழ்ந்த நிகழ்ச்சியை அறிவிக்கும் சுட்டு என்பதாகும்.

உலக வழக்கில் மட்டுமன்றிச் செய்யுளிலும் பண்டறி சுட்டு ஆளப்படும்.

சாந்தலிங்க சுவாமிகள் சிவப்பிரகாச சுவாமிகளிடம், "சிவஞான பாலய தேசிகர் மீது பாடல் பாடுக" எனக் கூறியபோது, "நான் நரனைப் பாடேன்" என்றார். பின்னர்த் தம் தவறு உணர்ந்து கலம்பகம் முதலிய நூல்களைத் தேசிகர் மீது பாடினார். சிவஞான பாலய தேசிகர் கலம்பகத்தில் ஒரு பாடலில், தேசிகர் தம்மையாட்கொண்டது பற்றிக் கூறும் போது,

"அவனோ இவன் என்று எனையாளும் அண்ணல்" என்று பாடினார். அவனோ எனும் சுட்டு நரனைப் பாடேன் என்று அவனா என முன் நடந்த நிகழ்ச்சியைச் சுட்டியது. அதனால் பாடலில் வந்தது பண்டறி சுட்டு எனப்படும்.

3. இனி உலகறி சுட்டு என்பதும் ஒன்றுண்டு என்பதைக் காணலாம்.

தன்னைத் துன்புறுத்தும் ஒருவனைப் பார்த்து, "ஏய்! நீ என்னைப் படுத்தும் பாடெல்லாம் மேலிருந்து அவன் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான். தக்க தண்டனை அவன் உனக்குத் தருவான்" என்பானேல், துன்புறுத்தப்பட்டவன் கூறிய "அவன்" என்றது கடவுளைச் சுட்டும். இப்படிச் சுட்டுவதை யாவரும் அறிவர். "எல்லாம் அவன் செயல்" என்பது உலகத்தார் யாவரும் கூறுவதே. அக்கூற்றில் வரும் அவன் என்பது உலகறிசுட்டு எனப்படும்.

"ஒரு வீட்டில் சாப்பறையொலிக்கவும் ஒரு வீட்டில் மணமுரசு முழங்கவும், காதலரைக் கூடியவர் பூவணியணியவும் காதலரைப் பிரிந்தவர் கண்ணில் நீர் வரவும் இப்படி மாறுபடப் படைத்தான் அக்குணங்கெட்ட கடவுள்" என்ற பொருளில்,

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பிலான் (புறம். 194)

எனும் வரிகளைப் படைத்தார் பக்குடுக்கை நன்கணியார் எனும் புலவர். இங்கே அப்பண்பு இலாளன் என்றது உலகைப் படைத்தவனை, மாறுபடப் படைத்தமையால் பண்பில்லாதவன் எனச் சுட்டப்பட்டான் கடவுள். எனவே "அப்பண்பிலாளன்" என்பதில் உள்ள அகரச்சுட்டு உலகறி சுட்டு எனப்படும். மேற்பாடலுக்கு உரையெழுதிய ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்களும் "சுட்டு உலகறி சுட்டு" என்றெழுதினார்கள்.

இதுவரை கூறியவற்றால் அகரச்சுட்டு சேய்மைச் சுட்டாக வருவதேயன்றி பண்டறி சுட்டாகவும், உலகறி சுட்டாகவும் வரும் என்பதறியலாம்.

—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அருட்திரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம் உரை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். **க. கதிரேசன்**)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

மாஅலர்க் கொந்தள வள்ளி மையலில் சிக்கிய மாயக்
காவல உன்அடி யாரைக் கண்டவர்க் கும்துயர் தீரும்
தாவில்அ கம்குளிர் கொள்ளும் சத்திய கேவலம் விள்ளும்
கூவிஅ ழுங்கும்என் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை

கோவே....தேவே; மாஅலர்....அழுங்கும். இத்தகு அடியார் வாழ்வை எனக்கு அருள்க என்று வருவித்துக் கூட்டுக.

குறிப்புரை

மா=மாட்சிமை. அலர் = மலர். கொந்தளம் = மகளிர் கூந்தல். மையல் = உணராமை. மாயம் = வேடம். தாவில் = பகைமை இல்லாத. சத்திய கேவலம் = துக்கமும், துன்பமும். விள்ளும் = பிளக்கும். கூவி அழுங்கும் = கூக்குரலிட்டுக் கெடும்.

பொழிப்புரை

என்கோவே, குன்றக்குடியுறை தேவே, மாட்சிமை பொருந்திய மலர்கள் சூடிய கூந்தலையுடைய வள்ளி நாச்சியாரின் உணராமையில், மீளவியலாது சிக்கியவன்போல் பலவேடம் பூண்ட காவலனே; உன்னையேயன்றி உன் அடியாரைக் கண்டவர்க்கும் துயரம் தீரும்; பகைமையில்லாத அவர் உள்ளம் குளிர்ச்சியடையும்; அவர்களது துக்கமும் துன்பமும் பிளந்து கூக்குரலிட்டுக் கெடும். ஆதலின் உன்னையேயன்றி உன்அடி யாரையும் காணும் பேற்றினை எனக்கும் அருள்க.

விளக்கம்

மா என்பது அழகு, வண்டு, மாட்சிமை என்ற பலபொருள் தருமாயினும், மாட்சிமையுள்ள மலரிடத்தில் பிறவும் இருத்தல் இயல்பாதலின் இங்கு மா = மாட்சிமை எனப்பெற்றது.

மையல் = வள்ளி நாச்சியாரின் உணராமை, அஃதாவது தன்னை ஆட்கொள்ள வந்தவன் பரம்பொருளே என்பது உணராமை.

வள்ளி நாச்சியாரை ஆட்கொள்ள முருகப்பெருமான் கொண்ட திருவேடங்கள் அனைத்தும் "மாயம்" = வேடம் எனப்பெற்றன. வேடம் பலவாயினும் குறிக்கோள் காத்தலேயாதலின் "காவல்" என்று விளிக்கப்பெற்றான்.

இயற்கைக் காந்தம் மட்டுமன்றி, அதனுடன் பலகால் முறையாக உராயும் இரும்புத் துண்டும் காந்தத் தன்மைபெறும். அதுபோல, ஞானவடிவான பெருமானை மட்டுமன்றி அவன் திருவடியைத் தமது உள்ளத்தால் வருடி வருடி இன்புறும். அடியவரும் காந்தநிலை - ஞானநிலை எய்துவர். ஆதலால் பெருமானை மட்டுமன்றி அவன் அடியாரைக் கண்டவர்க்கும் ஞானம் வாய்த்தலால் "துயர்தீரும்" என்றார்.

ஞானம், பகையுணர்வில்லாததாதலின் ஞானம் வாய்த்த அடியார் உள்ளம் "தாவில் - பகைமையில்லாத உள்ளம்' எனப்பெற்றது. துயர்தீர மனம் குளிர்தலும்; இதனால் துக்கமும் துன்பமும் பிளந்து குரல்எழுப்பிக் கெடுதலும் காரண காரிய நிகழ்வுகள் என்க.

இலக்கணக்குறிப்பு

அடியாரைக் கண்டவர்க்கும் - பெருமானைக் கண்டவர்க்கேயன்றி என்று எச்சப்பொருள் தரும் இறந்தது தழுவிய எச்சவும்மை. சத்திய கேவலம் - எண்ணும்மைத் தொகைகள்.

(தொடரும்)

எழுத்தாளர் டாகடர்.திரு. அய்க்கண் அவர்களுக்கு முதற்பரிசு

இவ்வாண்டு பிரான்சு நாட்டின் பாரிசு தமிழ்ச்சங்கம், பாரதியாரின் 125ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு, அனைத்து நாடுகளின் தமிழ் எழுத்தாளர்களுக்கிடையே நடத்திய கவிதை, கதை, கட்டுரைப் போட்டிகளில், சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர் அய்க்கண் எழுதிய "கற்புநிலை என்று சொல்ல..." என்னும் சிறுகதைக்கு முதற்பரிசு வழங்கப்பட்டுள்ளது. இவர் அருள்நெறித்தந்தையால் "நற்கதைநம்பி" என்னும் பட்டம் தந்து சிறப்பிக்கப்பெற்றவர். எழுத்தாளர் "அய்க்கண்" அவர்களை மக்கள் சிந்தனை பாராட்டி மகிழ்கிறது.

- ஆசிரியர்

விருது பெருமை பெற்றது

(கவிமுரசு. **ம. முத்தரசு,** குழிபிறை)

உரைத்திறம் வல்லநம் அடிகளார் இங்கே – உயர்
விருதுபெற் றாரென்று ஊதூது சங்கே!
முறைதிறம் பாதநல் வள்ளுவர் விருது – மா
முனிவர்க்கு உரியதாய்ப் பெற்றது பெருமை.
திரைகடல் ஓரம் சிலையாய் விளங்கும் – நம்
திருவள்ளுவ ரேஇதற் கொப்புதல் வழங்குவர்.
நிறைபுக ழால்உயர் குன்றக் குடிக்கிது – ஒரு
நிலைத்த பெருமைஎன்று ஊதூது சங்கே!

வாய்த்த தமிழறம் காக்கும்நம் முனிவர்க்கு – இனி
நலமெலாம் வருகஎன்று ஊதூது சங்கே!
காய்த்தது திருக்குறள் குலைகுலையாக – இனி
கனிகள் குலுங்கும் மலைமலை யாக!
தாய்த்திரு வள்ளுவம் தழைக்கும் நாடெலாம் – இனி
தலையாக நம்தமிழ் போற்றும் ஏடெலாம்!
போய்ப்புறம் மறைந்தது புன்மை இருளெலாம் – இனி
புகுந்தது ஒளிஎன ஊதூது சங்கே!

வழங்கினார் விருதென்று கலைஞரை வாழ்த்துவோம் – தமிழ்
வாழ்க வாழ்கென்று ஊதூது சங்கே!
முழங்கு திருக்குறட் பேரவை இனிமேல் – இனி
முத்தமிழ் மாமுனி அருளால் தழைக்கும்
பழந்தமிழ் நெஞ்சப் பண்பால் நிறைந்தவர் – தமிழ்
மக்களை எண்ணியே உயர்ந்தவர் அடிகள்!
இழந்தநம் பெருமைகள் அனைத்தையும் இங்கே – நம்
அடிகளால் மீட்போமென்று ஊதூது சங்கே!

பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி

(புலவர். **ச.மு. விமலானந்தன்,** க.மு.,கல்.இ.,)

முன்னுரை :

தமிழகத்தில் தன்னிகரில்லாப் பக்தி நெறியைப் பரவச் செய்த நானிலம் போற்றும் நாயன்மார்களின் நல்ல வரலாற்றை நற்றமிழ்ப் பாவில் நவிலும் காப்பியம் பெரியபுராணம். பெருமையிற்சிறந்த புராணமானதால் பெரியபுராணம் எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றிய சேக்கிழார் இதற்குத் "திருத்தொண்டர் புராணம்" என்று பெயரிட்டார். இது சுந்தரரின் திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருஅந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட காப்பியம். இக்காப்பியத்தில் இடம்பெறும் தனியடியார்கள் அறுபத்துமூவர்; தொகை அடியார்கள் ஒன்பது பேர்.

சைவ சமய நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்தமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். இதில் இரண்டு காண்டங்களும், பதின்மூன்று சருக்கங்களும், 4281 பாடல்களும் உள்ளன.

சேக்கிழார் என்பது குடிப்பெயர். அவர் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் வேளாளர் குடியில் தோன்றினார். அவரது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. அப்போது சோழநாட்டையாண்ட இரண்டாம் குலோத்துங்கன், அவர் புலமையை வியந்து பாராட்டி அவருக்கு முதலமைச்சர் பதவி தந்து சிறப்பித்தான். அவரது செயல் திறனை அறிந்த சோழன் அவருக்கு "உத்தமசோழப் பல்லவராயன்" என்னும் பட்டத்தை அளித்தான்.

சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடக் கல்வெட்டுகளிலிருந்தும், பல வகை நூல்களிலிருந்தும் தேவையான குறிப்புகளைத் திரட்டினார்; பிறகு காப்பியத்தைத் தொடங்கத் தில்லையிலுள்ள பொன்னம்பலத்துக்குச் சென்றார். அங்கு இறைவர் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தார். அதன்படி சேக்கிழார் பெரியபுராணத்தை "உலகெலாம்" எனத் தொடங்கி, "உலகெலாம்" என முடித்துள்ள பாங்கு சிறப்புக்குரியது.

சேக்கிழார் சிறந்த புலமை நலமும், பண்பு நலமும் மிக்க சான்றோர். அதனால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவர் மீது "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" பாடினார். அதில் அவரை, "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவி வலவ" எனப் பாராட்டியுள்ளார். மாதவச்சிவ ஞான முனிவர். "எங்கள் பாக்கியப் பயனாகிய குன்றை வாழ் சேக்கிழாரின் அடி சென்னி இருத்துவாம்" என அவரைத் தெய்வமாய்க் கருதி வழிபட்டார்.

இனி, பெரியபுராணம் பெரிதும் போற்றும் வாழ்க்கைநெறியை வகுத்துணர்வோம்.

1. ஒருவனுக்கு ஒருத்தி

"ஒருவனுக்கு ஒருத்தி" என்பது தமிழரின் வாழ்க்கை நெறி. இதனைத் திருநீலகண்டநாயனார் வரலாற்றின் மூலம் உணர்த்துகிறார் சேக்கிழார். அந்த நாயனார் தில்லையில் வாழ்ந்தவர்; குயவர் மரபினர். அவர் சிவனது கண்டமான "திருநீலகண்டம்" என்னும் பெயரை எப்பொழுதும் போற்றிக் கூறி வந்தார். ஆதலால் "திருநீலகண்டர்" என்ற பெயரைப் பெற்றார். அவர் சிவனடியார்களுக்குத் திருவோடுகளை அன்புடன் அளித்து வந்தார்.

திருநீலகண்டர் ஒரு நாள் கனிகையர் வீட்டிற்குச் சென்று வந்தார். இதனைச் சேக்கிழார், "இளமை மீதூர இன்பத் துறையின் எளியர் ஆனார்" என்று குறிப்பிடுகிறார். அதனால், அவருடைய கற்பிற் சிறந்த மனைவியார் சினங்கொண்டு, திருநீலகண்டரைப் பார்த்து, "நீவிர் எம்மைத் தீண்டினால் திருநீலகண்டத்தின் ஆணை உம்மைத் தடுப்பதாக" என்று ஆணையிட்டார். அதனைக் கேட்ட அவர் தம் மனைவி "எம்மை" என்றதனால் "மற்ற மாதரார் தம்மையும் மனத்தினும் தீண்டேன்" என்றார். "இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்று இராமன் சீதைக்குச் செவ்வரம் தந்தது போல நாயனாரும் தம் துணைவியார்க்கு உறுதியளித்தார். (இந்த இடத்தில் திருநீலகண்டரை முன்பு எளியர் என்று கூறிய சேக்கிழார் "பெரியர்" என்று குறிப்பிடுகிறார்.) சோதிவானவன் சோதனை செய்தபோதும் வாழ்நாள் இறுதிவரை இந்த உறுதியிலிருந்து இம்மியும் தவறாது இறையருள் பெற்றுய்ந்தார். (இறைவன் செய்த சோதனையைக் கூறின் கட்டுரை நீளும்.)

இந்த நாளில் "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற ஒழுக்க நெறியில் வாழ்ந்தால் "எய்ட்ஸ்" நோய் எட்டிப் பார்க்குமா? திருவள்ளுவரும் "பிறனில் விழையாமை" என்ற அதிகாரத்தில் தன் மனைவியைத் தவிரப் பிற மாதரை விரும்பக்கூடாது என்று ஆண்களுக்கான கற்பு நெறியை வலியுறுத்துகிறார். பாரதியாரும்

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்று பாடினார்.

திருநீலகண்டர் வரலாற்றை அறிந்த நாம் கற்புநெறி தவறாமல் "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற உயர்நெறியில் வாழ்ந்து உயர்வோமாக!

(தொடரும்)

"மாறுபடும் ஒழுக்கமே கூடா ஒழுக்கம்"

நாம் வாழும் சமுதாயத்தில் பல்வேறு திறத்து மக்கள் வாழ்கின்றனர்; பல்வேறு முகத்து மனிதர் வாழ்கின்றனர். ஒவ்வொருவரும் வேறு வேறு தொழில்களில், பொறுப்புக்களில் பணியாற்றுகின்றனர். நாடு சார்ந்து, மொழி சார்ந்து, வீடு சார்ந்து, இனம் சார்ந்து அவரவர்க்கும் பல்வேறு புற அடையாளங்களும் அமைகின்றன. இத்தகைய பன்முகப்பட்ட சமுதாய வாழ்முறையை வள்ளுவரும் அறிவார். ஆகவே உலகியலில் பல்வேறு முறையில், பல்வேறு வகையில் வாழ்ந்து தொழிலாற்றும் மக்கள், இயங்கும் மக்கள் அவரவரும் தேர்ந்து கொள்கிற ஒழுக்கங்களிலிருந்து மாறுபடாமல் வாழவேண்டும். அந்த ஒழுக்கங்கள் எவை? எவை? என்று அவர்களுடைய நெஞ்சங்களே அறியும். நெஞ்சறிந்த அந்த ஒழுக்கங்களிலிருந்து அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் மாறுபடக்கூடாது; வேறுபட்டுவிடக்கூடாது. அவ்வாறு மாறுபடுபவை களையே வள்ளுவர் "கூடா ஒழுக்கம்" என்றார்; வேறு மொழியில் சொல்வதானால், வள்ளுவர் "பொருந்தா ஒழுக்கம்" என்றார் எனலாம். தனிமனிதரோ, குடும்பமோ, துறவியோ யாராக இருப்பினும் வள்ளுவர் குறிப்பிடும் பொருந்தா ஒழுக்கத்தை அதாவது கூடா ஒழுக்கத்தை நீக்கி, பொருந்தும் ஒழுக்கத்தைப் போற்றி வாழ்வது நமது கடப்பாடு ஆகும்?

(18.8.2007 ஆம் நாள் நிகழ்ந்த 109 ஆம் "சிந்தனை நந்தவனம்" கூட்டத்தில் தவத்திரு அடிகள் ஆற்றிய நிறைவுரையின் ஒரு பகுதி)

செய்தி : "மூமு"

தமிழாய்ந்த ஆங்கில அதிகாரி

பொதிகையில் தவழ்ந்து தென்னன் பொருப்பிலே வளர்ந்து சிறந்த மொழி தமிழ். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வளர்ந்தமொழி தமிழ். கற்கத் தொடங்கியவர்களைத் தன்பால் ஈர்த்து மேலும் மேலும் சிறக்கச் செய்து அறத்தையும் அன்பையும் இறையையும் ஊட்டி வளர்ப்பது தமிழ்.

இம்மொழியின் சிறப்பை விளக்க ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட இலக்கணம், இலக்கியம், வரலாற்றுக் கல்வெட்டுகள் உள்ளன.

ஏழு சொற்கள் முதல் ஏழாயிரம் சொற்கள் வரை உள்ள பாடல்கள் தமிழில் உள்ளன. காப்பியங்களும் கதைகளும் கற்றாரையும் கேட்டாரையும் பிணைக்கத்தக்கன.

இத்தகைய சிறப்பும் செழிப்பும் வாய்ந்த, தமிழில் அறம், பொருள், இன்பம் மூன்றையும் விளக்கும் சிறப்புப் பெற்றது திருக்குறள் ஆகும்.

திருக்குறள் அதன்பால் ஈடுபாடு கொண்டு கற்றோர்க்கு, மன நிலைக்கு ஏற்பப் பொருள்தரும் தன்மையும் உண்டு. இலக்கிய நூல்களில் அதிக அளவில் உரை எழுதியவர்களையும், எழுதிக் கொண்டிருப்பவர்களையும் கொண்டது திருக்குறளேயாகும்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள்ளன. இதன்பால் இல்லாப் பொருளே இல்லை என்று கூறியதும், கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள் எனக் கூறப்படுவதும் இதனால்தான்.

சொல் புதிது, பொருள் புதிது, சோதி மிக்க நவ கவிதையாக, எக்காலத்தும் மிளிரும் தகுதி திருக்குறளுக்கு உண்டு.

பாராள வந்த அதிகாரி திருக்குறளுக்கு அடிமைப்பட்டுப் போனான் என்பது வரலாறு.

பாரத தேசம் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலம் அது. முன்னர் பொருளையும் பின்னர் கொடியையும் விற்பதற்கு வந்தனர் ஆங்கிலேயர்.

பிரான்ஸிஸ் வொயிட் எல்லீஸ் 1777ல் பிறந்த சாதாரண குடிமகன். இவர் 1796ல் ஆங்கிலேயக் கம்பெனியில் கீழ்நிலை

எழுத்தராகச் சேர்ந்தார். பின்னர் கம்பெனி கணக்குகளை எழுத சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சென்னையில் அவருக்கு நில நிர்வாகத் துறை ஒதுக்கப்பட்டது. அப்பிரிவில் 8 ஆண்டுகள் பணிபுரிந்தார். பணியின் பகுதியாக நிலங்களைப் பற்றியும், அதன் உடைமை, உரிமை மற்றும் பயன்படுத்துவோரின் கடமை ஆகியவற்றைப் பற்றியும் அறிவதற்காக, தமிழக மக்களிடம் நெருங்கிப் பழகினார்.

அவரது பணியில் ஆழ்ந்த ஈடுபாடும், பொதுமக்களிடம் பழகும் மாண்பும் மேலாளர்களை உணரச் செய்து, அவரைச் சென்னை மாவட்டக் கலெக்டராக நியமித்தனர். கம்பெனியார் பின்னர் 1806ல் தஞ்சையில் நீதிபதியாகவும், 1809ல் சென்னை மாகாணத்தில் நிலங்கள் குறித்த ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டார்.

இந்தப் பதவிகள் எல்லாம் அவருக்கு தமிழ்நாட்டு மக்களுடன் மிக நெருக்கமாகப் பழகும் வாய்ப்பினை ஏற்படுத்தின. தமிழ்மொழியைக் கற்றதுடன் பிற மொழிகளையும் கற்றார். 1818ல் திராவிட மொழிகள் வட இந்திய மொழிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதையும், இவை தனித்து இயங்கும் தன்மையுடையன என்பதையும் உலகிற்கும் எடுத்து உரைத்தார். அந்த ஈடுபாடும் ஆழ்ந்த கருத்துப்புலமையும் அவரை இலக்கியங்கள்பால் நிலைகொள்ளச் செய்தன. அதிலும் சிறப்பாக, திருக்குறள் அவருக்கு ஒரு பொக்கிஷமாகத் தோன்றியது. அதனை ஒரு வேதமாகவே கொண்டு தனது நிர்வாகத் திறமையில் பயன்படுத்தும் நிலையைப் பெற்றார்.

இவர் சென்னை மாவட்டக் கலெக்டராக நிர்வாகம் செய்தபோது, 1816ல் பெரும் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டது. அதற்காக 27 கிணறுகளைச் சென்னை மாவட்டம் முழுக்க ஆங்காங்கே எடுத்து மக்களுக்குச் சேவை செய்தார்.

தான் செய்த பணிகளை வெளியில் தம்பட்டம் அடிக்காமல், ஒரே ஒரு பொது இடத்தில் இந்தக் கிணறு தோண்டிய தகவலைக் கூறி அதனை எதற்காகச் செய்தார் என்பதையும் தெளிவாக்கி திருக்குறளையே ஒரு வரியில் சேர்த்து மயிலாப்பூரை அடுத்த ராயப்பேட்டை பெரிய பாளையத்தம்மன் கோயில் பின்புறம் தோண்டிய கிணற்றின் கைப்பிடிச்சுவரில் கல்வெட்டு ஒன்றை 1818ஆம் ஆண்டு வெட்டி வைத்தார்.

இக்கல்வெட்டில் ஜார்ஜ் 111ஆம் அரசரின் 57ஆம் ஆண்டில், யூ லெபத் என்னும் கவர்னரின் கீழ் இருந்த சென்னை மாவட்டக் கலெக்டராகவும், நாணயச் சாலை பொறுப்பாளராகவும், இருந்த எல்லீசன் என்னும் நான்,

"புலவர் பெருமானான மயிலையம்பதியின், தெய்வப் புலமைத் திருவள்ளுவரின் திருக்குறளில் மனம் ஒன்றி, 737ஆம் குறளினை உணர்ந்து 27 கிணறுகள் கண்டு, வார, திதி, நட்சத்திர, யோக, கரணம் பார்த்து புண்யாஹ வாசனம் செய்தேன்" என்று குறிப்பிட்டுள்ளது.

திருக்குறளின் பாடல்வரிகளை எடுத்தாண்டு வெட்டப்பட்ட கல்வெட்டு விபரம் கீழே உள்ளது.

சென்னை இராயப்பேட்டை பெரியபாளையத்தம்மன் திருக்கோயில் கிணற்றில் இருந்த கல்வெட்டு

பாரெலா நிழற்று பரியரிக்குடையோன்
வாரியுஞ் சிறுக வருபடைக் கடலோன்
ஆர்கட லதிர வார்த்திடுங் கப்பலோன்
மரக்கல வாழ்வின் மற்றொப் பிலாதோன்
தனிப்பெருங் கடற்குத் தானே நாயகன்
தீவ ள் பலவும் திதி பெறப் பரப்போன்
தன்னடி நிழலிற் றங்கு பல்லுயிர்க்குந்
தாயினுமினியன் தந்தையிற் சிறந்தோன்
நய நெறி நீங்கா நாட்டார் மொழி கேட்டு
உயர் செங்கோலும் வழாமை யுள்ளோன்
மெய்ம்முறை ஒழுக்கம் வீடுரா தளிப்போன்
பிரிதன்னிய சுகோத்திய யிபானியமென்று
மும் முடி தரித்து முடிவிலாத்
திக்கனைத்துந் தனிச் சக்கர நடாத்தி
யொரு வழிபட்ட வொருமையாய்என்
வீர சிங்காதனத்து வீற்றிருந் தருளிய
சோர் சென்று மூன்றா மரசற்கு 57ம் ஆண்டில்
காலமுங் கருவியுங் கருமமுஞ் சூழ்ந்து
வென்றியொடு பொருள் புகழ் மேன்மேற் பெற்ற
கும்பினியார் கீழ்ப்பட்ட கனம் பொருந்திய
யூ லெயத் தென்பவ னாண்டவனாக
சேர சோழ பாண்டியாந்திரங்
கலிங்க துளுவ கன்னட கேரளம்


பணிக்கொடு துரைத்தனம் பண்ணும் நாளில்
சயங்கொண்ட தொடிய சாணுறு நாடெனும்
ஆழியிலிழைத்த வழகுறு மாமணி
குணகடன் முதலாக குடகடலளவு
நெடுநிலத்தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீசனென்பவன் யானே
பண்டார காரியபாரஞ்சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம்பதியான்
தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
திருக்குறளடன்னிற் றிருவுளம் பற்றிய
"இருபுலனும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு"
என்பதின் பொருளை என்னுளாய்ந்தது
ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்த
ஹூ 1740 செல்லாநின்ற
இங்கிலீசு ஹூ 1816ம் ஆண்டில்
பிரபாவதி ஹூக்கு மேற்செல்லா நின்ற
பஹுதான்ய ஹூத்தில் வார திதி
நக்ஷத்திர யோக கரணம் பார்த்து
சுப திநத்தி லிதனோ டிருபத்தேழு
துரவு கண்ட புண்யாஹவாசநம்
பண்ணுவித்தேன்.
1818"

என்றுள்ளது. இக்கல்வெட்டில் தமிழகத்தின் வழக்கத்திலிருந்த வருடம், திதி, கரணம், யோகம் ஆகியவற்றைக் குறித்து விளக்கி உயர் இலக்கியமாம் திருக்குறளின் சிறப்பையும் விளக்கிக் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. இன்றளவும் இந்தக் கிணறு பலருக்கு குடிநீர் வழங்கும் கிணறாகப் பயன்பட்டு வருவது கருத்திற்கொள்ளத் தக்கது.

இந்தக் கல்வெட்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் 1978க்கு முன் திருக்கோயிலிலிருந்து கொண்டு செல்லப்பட்டு 1992க்குப் பிறகு மதுரை திருமலை நாயக்கர் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

- தகவல். **இரா. இரகுநாதன்** (செயல் அலுவலர்)
நன்றி : "திருக்கோயில்" 2007 டிசம்பர் மாத இதழ்

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி

பரிமள விலாஸ்

S. சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி — 624 601.

போன் கடை : 242405   வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

✆ : 04577 - 264567 Mobile : 94433 64200

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இயக்குநர்,

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி 2.கணிப்பொறி பயிற்சி 3. எலக்ட்ரிக்கல் வயரிங் மற்றும் ரிப்பேரிங் 4. மின் அணுக்கருவிகள் பழுதுபார்த்தல் 5.வெல்டிங் பயிற்சி (பற்றவைத்தல்) 6.சீட் மெட்டல் உற்பத்தி 7.பைபர்கிளாஸ் பொருள்கள் உற்பத்தி 8.கட்டிட தொழில்நுட்பம், பொருள்கள் உற்பத்தி 9.இரண்டு நான்கு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் ரிப்பேரிங் 10.கயிறு மற்றும் பாய் தயாரித்தல் 11. குளிர்சாதனப் பெட்டிகள் ரிப்பேரிங் 12.வார்ப்பு உலோக உற்பத்தி 13.ஹாலோ பிளாக் & மொசைக் கற்கள் தயாரித்தல் 14. சாக்பீஸ், மெழுகுவர்த்தி தயாரித்தல் 15. கம்ப்யூட்டர்சாம்பிராணி, பினாயில் தயாரித்தல் 16. மருத்துவ உதவியாளர் 17.மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் கையாளுதல் 18. திரை அச்சு வேலைகள் 19. வீட்டு உபகரணப் பொருட்கள் பழுதுபார்த்தல் 20.யோகா ஆசிரியர் பயிற்சி 21. ஓவியம் மற்றும் வரைபடம் வரைதல் 22. கைவினைப்பொருட்கள் தயாரித்தல் 23. உணவுப் பொருட்கள் தயாரித்தல் 24. கேஸ் வெல்டிங் 25. தொழில்முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி 26. இயற்கை உயிர் உரம் (மண்புழு) தயாரித்தல் 27. வேளாண் சார்ந்த பயிற்சிகள் 28.தோட்டக்கலை சார்ந்த பயிற்சிகள் 29. கால்நடை சார்ந்த பயிற்சிகள் 30. மின்சாதனப்பொருட்கள் பராமரிப்பு

தகுதி	:	தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.
பயிற்சி நேரம்	:	பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.
குறிப்பு	:	ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின்

புதிய நூல்

உலகம் முழுக்கத் திருக்குறள் பரப்பப் பேரவை கண்டவர்; தம் வாழ்நாள் முழுக்க வள்ளுவ நெறியினை வழங்கி நின்றவர்; வாழ்ந்து நிலைத்தவர் ஆகிய அடிகள் பெருமான் எழுதிய திருக்குறள் உரை முதன் முதலாக, நூல் வடிவமாக!



தவத்திரு குன்றக்குடி அடிகளார்
திருக்குறள் உரை
(விலை. ரூ. 160/- பக்கங்கள் : 360)

பதிப்பகங்கள், கல்லூரி, பள்ளி, நிறுவனங்கள் மற்றும் இலக்கிய அமைப்புகள் இவற்றோடு மாணவ, மாணவியர்க்கும் "மக்கள் சிந்தனை" சந்தாதாரர்க்கும் விலைச் சலுகை உண்டு.

அடிகளாரின் முத்துவிழா வெளியீடு

அருள்நெறிப் பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்.

MAKKAL CHINTHANAI - January 2008 Price Rs. 5-00
Date of Publication 20-01-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ______________________ ________
அவர்கள்

________________ ______ ________

________________ ________

________________ ________________

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி ☎ : 264166